பி. யு. சின்னப்பா - கண்ணும்பா நடித்த



# கண்ணகி

# கதைச் சுருக்கம்

கைலாசத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் தர்க்கம். சிவன் பெரிதா? சக்தி பெரிதா? இரண்டும் பெரிதென்கிறார் சிவன். சக்திதான் பெரிதென்கிறார் பார்வதி. சிவன் பார்வதியை துர்க்கையாகச் சபித்து மதுரையில் வசிக்கச் செய்கிறார். வாணியன் தனக்கு எண்ணெய் எல்லாம் விற்றுவிட்டதால் துர்க்கை கோயிலில் நெய் விளக்கேற்றுகிறான். அக் குற்றத்திற்காக அரசன் அவனைச் சிரச்சேதம் செய்கிறான்.

தனக்கு விளக்கேற்றியவனை சிரச்சேதம் செய்த குற்றத்திற்கு பழிவாங்க பாண்டியன் மகளாகப் பிறக்கிறாள் துர்க்கை. அவளின் ஜாதகத்தால் குலம் அழியும் என்பதை அறிந்த அரசர், அவளை ஒரு பெட்டியில் அடைத்து வைகையில்விட, அதை மாணாக்கன் செட்டி எடுத்து கண்ணகி என்று பெயரிடுகிறான். வாணியன் மாச்சோட்டானுக்கு மகனாகப் பிறக்கிறான், கோவலன் என்று பெயரிடப்படுகிறது. கோவலனுக்கும் கண்ணகிக்கும் கல்யாணம். அன்று தாசி மாதவி நாட்டியம். அவள் வீசிய மாலை கோவலன் கழுத்தில் விழுகிறது. கோவலன் மாதவியுடன் போகவேண்டியது என்பது அரசன் தீர்ப்பு. கோவலன் ஏராளமான செல்வத்தை கண்ணகியிடம் பெற்று மாதவிக்குக் கொடுத்தான். பின் மாதவிக்கும் கோவலனுக்கும் தப்பபிப்பிராயம் ஏற்படவே அவன் கண்ணகியிடம் செல்கிறான். ஆனால் தரித்திர கோலத்தில் அவ்வூரில் வாழ விரும்பவில்லை. கண்ணகியைக் கூட்டிக்கொண்டு மதுரைக்குச் செல்கிறான். அங்கு கண்ணகியின் சிலம்பை விற்று ஏதாவது வர்த்தகம் செய்ய எண்ணி வஞ்சிப்பத்தன் என்பவனிடம் காட்டினான். அவன் அரசனிடம் களவாடிய சிலம்பு இதுதானென்று கோவலனைக் காட்டிக் கொடுக்கிறான். அரசனும் அவனைச் சிரச்சேதம் செய்தான்.

கண்ணகி அங்கு சென்று செய்தியை அறிந்து பாண்டியனை பழிக்குப்பழி வாங்குகிறாள். அதோடு மதுரையையும் தீக்கிரையாக்குகிறாள்.

சுபம்!

# கண்ணகி - பாடல்கள்

1. கவுந்தியடிகள் — ராகம்: பூபாளம்

பூதலம் புகழ் ஜோதி நிலவும் ஆதவா நீ வா
சீதக் கடலும் துயிலும் நீங்கி சேவல் கூவின
தீதுரும் அஞ்ஞான மார்க்கத் திரையும் நீங்கவே
ஓதரும் மெஞ்ஞான மார்க்க உணர்வும் ஓங்கவே

ராகம் - பிலஹரி

காவின் மரங்கள் காய்த்துத் தழைக்க
பூவின் கொடி புல் பூண்டு செழிக்க
பாவினம் பயிர் பறவை ஒலிக்க ஆவினம் அம்மா வென்றழைக்க
பூதலம் புகழ் ஜோதி நிலவும் ஆதவா நீ வா

2. பாலகோவலன் விருத்தம்—ராகமாலிகை

வளர்கோட்டு இளம் பிறையும்
அமுதகலை துலங்கு வட்டமதியாம்போதென
மனமதினில் ஆனந்த மகிழ்வுண்டாகும்
மாசிலா ஆண் கன்று வயது வந்து பசுவாகி மடிசுரந்து பால்தரும்
மாண்பு மிகும் என்னுடலை வலிமையாக்கும் [கான்
செழிக்குமிந்தச் செடியரும்பு தேனூறும் மலராகத் திகழும்போது
தினம் யானும் நுகர மறுமணம் உண்டாக்கும்
தேசுலவும் பருவமதே காசினியில் இயற்கை இன்பச் சிறப்பு மேவ
தேனும் மலர்மதி சாட்சி தெரிவதன்றோ

3. பெரிய கோவலன் — பல்லவி — ராகம்-சங்கராபரணம்

சந்த்ரோதயம் இதிலே காணுவதும்
செந்தாமரை முகமே ஆனந்தம் (சந்த்)
(அநுபல்) சந்தோஷம் தானடைந்தேன் யானுமனச் (சந்)
வானுலவும் அந்தம் பொலிந்தமுது சிந்தும் கலைநிறைந்த (சந்)
(சரணம்: பாந்தம் மிகு பசுவிலே உயர் (பாந்) தோன்றுவதன்
சாந்தம் கடவுள் தன்மை சார்ந்தும் விளங்கும் ருது (பா)
தோய்ந்த மருமலரிலே மது (தோ) உனது நகை
வாய்ந்த அழகினை ஆராய்ந்தேன் அது நீயாகும் (சந்)

4. கண்ணகி பூஜை — ராகம்: மாண்டு

பரமேஸ்வரனே தேவா
தேவா மகேசா பார்வதி பாகா கருணாசாகரா ஸ்ரீபார்வதி பாகா
மறையோன் திருமாலும் போற்றும் மதிசேகரனே காப்பாற்றும்
அரவும் புலியும் காண நாளும் ஆடிடும் பாதா (பர)

5. கோவலன் — ராகம்: மாண்டு

தேவி மனோகரியான ஸ்ரீமதி திருமாமணி நீயே துணை
வாழ்வின் நலமே மகிதல மீதிலென் மாதவம் சௌபாக்கியம்
யாவும் நீயன்றோ ஜீவசிந்தாமணி திருமாமணி நீயே துணையே (தேவி)

6. கோவலன் பல்லவி ராகம்: நவரஸகன்னடா

அன்பில் விளைந்த அமுதமே அன்னமே என் கண்ணகி

(அநுபல்) கன்னல் தெளிதேன் பாகுசீனி
கனியும் சேர்ந்த கற்கண்டா முன்மேனி (அன்)

(சரணம்) காணும் கலைநீ கலாப மயில்நீ காதல் உலகம் கடலும் நீயே
மானி நீ என் மாதவம்நீ மாசில்லாத இல்வாழ்வின் நலம்நீ (அ)

7. மாதவி பல்லவி ராகம்-காம்போதி

மாலாகினள் ஸ்வாமி மங்கையும் உன்மேலே (மா)

(அநுபல்) பூலோக ரம்பைபோலே பூவையின் சொல் தேன் பாலே
சேலார் கண் இடை நூலே சிறுமி அவள் அன்பாலே (மா)

(சரணம்) கந்தமும் கமழ மலர்ந்த கனகமென் மலராம் இது
சுந்திரா உந்தனைக் கண்டு சொல்லொணாத நாணங்கொண்டு
சிந்தையும் தேகம் சிவந்த விந்தையைய நீர் காண்கிலீரோ
செந்திருமலர் காற்றாலே சிதறாமுன் கைக்கொள்வீரே (மா)

8. தோழிகள் பல்லவி ராகம்-பைரவி

அதிரூபமான பெண் உமக்கேற்கவே நடப்பாள்
அழைத்து வரவா சாமீ (அதி)

(அநுபல்) மதன ரதி இந்த்ராணி மலர்மகள் கலைவாணி
மாதர்கள் கண்டு நாணும் மான் விழியாளேயிங்கு (அதி)

ராகம்—பியாகடை

(சரணம்) கன்னமிரண்டும் முகம் பார்க்கும் கண்ணாடி
கனகச் சிலை நிகர்த்த காரிகை ராஜக்ரீடி
அன்ன நடையழகி அவளாம் தகுந்த ஜோடி
ஆரணங்கோடு சுகம் அநு விக்கலாம் கூடி (அதி)

9. மாதவி ராகம்-கமாஸ்

இவர்தானா ; இவர் தானா ; இவர் தானா ; என்னாசைக் கண்ணாளன்
எனதுயிர் பாக்கியரே மன மோகனன் (இவர்)
புவன மயங்கிடும் எனக்கிவர் சரியோ
பூவையரே இவர் தானென் துரையோ
கவனமின்றி நீர் பேசுதல் முறையோ
கண்களின் குறையோ அறியேன் பூமாரன் (இவர்)

10. கவுந்தியடிகள் ராகம்-ஹிந்துஸ்தான் பைரவி

ஓதும் காலம் கடந்த வல் விதியை
உணர்ந்தால் யாரும் அறிவார் பதியை
ஆதலினால் மனமே நின் விதியை
ஆராய்வதே மதிதானாமே விதி மீறிடார் புவிமீதே

11. கோவலன் ராகம்-தேசிகச்சிந்து

வந்தனள் ஒரு சுந்தரி-திரு மங்கை போலொரு மாது-கொஞ்ச
வயதுதான் நல்ல சாது - விசு வாச மேவும் ஜவ்வாது-அன்று

மாலை வீசியுன் மாலையே கொண்ட மாதவி என்னும்போது
கந்தமார் குழல் வண்டினும்—கொன்றைக்
காயுடனிருள் மோகம்-நுதல் கலாமதிக் கொருபாகம்-புருவம்
ககன வில்லுடன் ஸநேகம்
கானில் வாழ் மடமானையும் முதல்மீனை மானுதலாகும்
மாசில்லாள் முகம் தேசுலாவிய வானகச் சந்த்ர பிம்பம்-படர்
மதன மோகன டம்பம்-கண்டம் வாரி தோய்ந்த வெண்சங்கம்-திகழ்
மார்பிடந்தனில் வார்பெறும் தனம் சீர்பெரும் செம்பொற் கும்பம்

**12.** கவுந்தியடிகள் ராகம்-மிஸ்ர சாரங்கா

விதியதாம் மாறுதலாம் மகளே வீணே இவ்வேதனையேன் மகளே
மனோபதி காணுவிதி அதுவே மாயா சொரூபமதே மயம் சேர்
சதாசிவன் தனையே தாழ்த்தும் விதியே அதாம் தர்மமே
நாளிது இல்லையேல் நாளையே பணிவரே
அங்கும் வென்றதும் விதி ஆகுமே
உனை நியே நினையாததும் விதியாம்
உலகமெல்லாம் விதியால் நிகழும் உணராமல் வேதனையேன்

**13.** கோவலன் ராகம்-பஹாடி

தேவ மகன் இவள் யார்—யாரோ (தேவ)
தேனின் மொழியாள் தென்றலின் ஒயிலாள் (தேவ)
பூவிலயன்மால் புரமெரித்தோனும்
யாவரும் மயங்கும் யோகினிதானோ (தேவ)
லோக மோகன யோகினி போலே
ஜாடை காட்டும் அன்னப்பேடையன்போடு
கூடிக்குலாவும் நந்நாளும் எங்காளோ (தேவ)

**14.** மாதவி ராகம்-செஞ்சுருட்டி

மலர் மாரனோ தேவ மாயனோ சுர வனிதாமணி மாதர்புகழ்
சுரேசனோ யாவனோ சொல் (மலர்)
இன்ப - நலமே குலாவுமுந்தன் பார்வையால் - காதல்
அலைமோதும் நீரில் மூழ்கலாகினேன் காணுவாய் நீ (மலர்)
தென்றலும் தீயாய் மிக வீசுவதாலே
தேனும் பாலுமே வீணென வெறுத்தேன்-ஜெகமே
இதுபொழுதே எனைச்சேர்ந்தா லுயிர் வாழ்வேன் நீ (மலர்)
மோகனவானுன் மேல் வாலிபத்தாலே
மோகமுமானேன் மோடி செய்யாமல்
மகிழ்ந்தென் னையே மகிபா வந்தணைவாயே நீ (மலர்)

**15.** கோவலன் ராகம்-மிஸ்ர சாமா

மானமெல்லாம் போனபின்னே வாழ்வது தானொரு வாழ்வா
வணிகர்குல மரபினர்க்கோர் வசைதர ஏன் பிறந்தேனோ
குஞ்சரமீதும் பஞ்சணை மேலும் குலவிய காலம் ஓர் காலம்

நஞ்சனையாளின் வஞ்சனையாலே நடைப்பிணமானதோர் காலம்
கரையடுத்த நீரிருக்க கானலை நாடிடும் மானினம்போல்
கனி கொடுத்தாள் தனை விடுத்தே கணிகையின்பால் அலைந்தேனே
கற்பகமேவும் கனியருந்தாமல் காஞ்சிரங்காயை யுண்டேனே
காமுகன் யான் கண்ணகியாள் மாமுகம் காணவுமாமோ
தப்பிதம் யாவும் நானே புரிந்தும் தாசியை நோவதும் வீணே

**16. கண்ணகி** ராகம்-யமன் கல்யாண்

ஆரண்யலாவண்யமே அருமையே
அவனிமேல் ஆனந்தம் ஆனந்தமே (ஆர)

ஆசை நாதனும் அன்புடனே அருகினில் மேவுமிந் நாளினிலே
ஆரண்யம் மாளிகை ஆகவும் தோணுதே (ஆர)

குளிர் ஓடையின் பாலொரு மேடையின் மேல்
மயில் ஆடுவதும் குயில் பாடுவதும் மருவுலாவும் மலரின் மாஷி
வளர்ந்த மரங்கள் கண் காக்ஷியெல்லாம்
மாசில்லாத ஈசனின் அருளால்
வாழ்ந்திடும் நலங்காண மனச்சோர்வு மறந்தேனே (ஆர)

**17. கோவலன்** பல்லவி ராகம்-சகானு

பத்தினியே உன்போல் இத்தரை மீதினில்
உற்றவர் யார் புகல்வாய் தர்ம (பத்)

(அநுபல்) சத்தியமாகவே தாய்க்குப்பின் தாரம்
தாரத்தினலல்லவோ சம்சாரம்

(சரணம்) பந்து ஜனமெல்லாம் வீண் பரிவாரம்
பாரினில் அவரால் யேதுபகாரம்
அந்தரங்தனிலும் உதவுவாள் தாரம்
ஆபத்து வேளையில் ஆகும் ஆதாரம் (பத்)

**18. கவுந்தியடிகள்** ராகம்-பிஹாக்

மாநிலமீது ஜீவர்கள் வாழும் வாழ்வொரு நாடகமாகும்
நீயதிலாடிப் போனதுபோக நிகழ்வது தானொரு பாதி

**19. கோவலன்** ராகம்-புன்னுகவராளி

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறுங்கால் தான்
கொண்ட கருவேயளிக்கும் கொள்கையதுபோல்
பண்டு தனம் கல்வி மதி பாழுடையும் கள் மனம்
பாவையாமேல் நாடுமென்றே படித்துணர்ந்தும் நான்
மணந்தவளை தான் மறந்து மாதவி சதமென நினைந்தேனே

ராகம் - புன்னுகவராளி

ஆலவாய் மதுராபுரி மீனாட்சி சுந்தரா அபயம் அபயம் (ஆ)
சிலமேவும் உன் தெரிசனமே சேவிப்பார்க்குண்டோ விசனமே (ஆ)

20\. கண்ணகி

ராகம்-ஹிந்துஸ்தான் பைரவி

தயாபரி சகாயம் நீ செய்யாவிடில் எவ்வா றுய்வேன்
சதி பதியெமைச் சேர்த்தாய்
எனைத் தனியாளாக்கியும் சேர்த்தாய்
பின்பும் பிரித்தாய் பேதையெனை
இதுவுமுன் திருவுள்ளமோ பாரில் (சதி)
தாயே இருந்தும் சேயும் ஏங்கி தவித்திடும் நிலைபோல் ஆனேனே
தாரணி மீதென் ஆருயிர் நாதன் சங்கடந் தீர்ந்திட தயை புரிவாயே
சதி பதியாய் எமைச் சேர்ப்பாய்

21\. ருக்மணி—கிருஷ்ணன் (காமிக்)

ருக்: கண்ணா... கமலக் கண்ணா
மணிவண்ணா என்னைக் கல்யாணம் செய்குவாயே (க)
கிருஷ்: கலங்காதே மானே கனியே செந்தேனே
காதலாலே வாடிநொந்தேன் ஆதலாலே ஓடிவந்தேன் )
ருக்: கமலபாதம் தஞ்சம் தஞ்சம் கண்ணா கருணை செய்வாய்
கிருஷ்: கண்மணி அஞ்சாதே கலங்காதே
கலங்காதே விண்ணோர்கள் வந்தாலும் மண்ணுறச் செய்குவேன்
விட்டுவிடாமலே கொண்டுமே சென்றிடுவேன்
ருக்: ஆஹா கண்டேன் நான் கண்டேன் கலியாண மாப்பிள்ளையை

22\. ருக்மணி—கிருஷ்ணன்

ருக்: கண்ணனென்தன் காதலன்தானே நீயல்ல
மண்ணைத் தின்று உலகைக் காட்டினாய்—அன்று (கண்)
என்னை வைத்து தேரை யோட்டினாய்
கமலக் கண்ணனென்தன் காதலன் தானே
கிருஷ்: மண்ணைத் தின்று மகிழச் செய்தவன் நானேதான்
மங்கையுனக்கிந்த சந்தேசம் ஏனோதான்
மந்தகாச வதன சுந்தரி மானே வா
ருக்: ஸ்யாம சுந்தரனே மதன மோகனா (ம)
செய்பிழை பொறுத்தருள்வாய்
ஓடி விளையாட வாருமே கோபாலா
தேடித் தேடி தெருவில் நின்றேனே—என்னை
தேற்றுவிக்க வந்த பூமானே—கண்ணா ஓடி விளையாட வாருமே
கிருஷ்: மணமுள்ள பாரிஜாதமே ஆச்சர்யம்
மங்கையுந்தன் கூந்தல்தனிலே வச்சிக்கோ
மாதவத்தால் வந்த பெண்மணி ருக்மணி
இருவ: ஆடிப்பாடியே அன்பு கொண்டுமே
அகமகிழ்ந்தே வாழ்வோம்

○

K. M. Press, Vdgm.

R. S. வா[illegible]
ராஜா டா[illegible]
கும்பகோணம்.

## நடிகர்கள்

| | |
|---|---|
| பி. யு. சின்னப்பா | கோவலன் |
| டி. பாலசுப்ரமணியம் | பாண்டியன் |
| எம். ஆர். சுவாமிநாதன் | வஞ்சிப்பத்தன் |
| டி. வி. நமசிவாயம் | பால கோவலன் |
| கே. என். குளத்துமணி | மாச்சோட்டான் |
| கே. பி. ஜெயராமன் | மாணுக்கன் |
| எஸ். வி. சகஸ்ரநாமம் | பரமசிவன் |
| கே. என், ராமலிங்கம் | நன் மந்தியு |
| வி. ரமணி | தர்மந்திரி |
| டி. ஆர். ராமச்சந்திரன் | சாஸ்திரி |
| என். எஸ். கிருஷ்ணன் | இஞ்சிப்பத்தன் |
| ஈ. கிருஷ்ணமூர்த்தி | தணிகாசலம் |
| திருவேங்கடம் | மீனாக்ஷி |

## நடிகைகள்

| | |
|---|---|
| பி. கண்ணம்பா | கண்ணகி |
| எம். எஸ். சரோஜா | மாதவி |
| குமாரி ரத்தினம் | பால கண்ணகி |
| யு. ஆர். ஜீவரத்தினம் | கௌந்தியடிகள் |
| எம். எம். ராதாபாய் | பாண்டிய மகிஷி |
| எஸ். யோகாம்பாள் | மாதரி |
| டி. ஏ. ஜெயலக்ஷ்மி<br>கே. ஆ ஜயலக்ஷ்மி | நடனமாதர் |
| டி. வி. ஏ. பூரணி | வசந்தமாலை |
| டி. ஏ. மதுரம் | வஞ்சிப்பத்தன் மகள் |
| கே. டி. சக்குபாய் | இஞ்சிப்பத்தன் மனைவி |

கதை, வசன : இளங்கோவன்

பாட்டு : உடுமலை நாராயண கவி

டைரக்ஷன் :

**எம். சோமசுந்தரம். ஆர். எஸ் மணி**

ஸ்டூடியோ: நியூடோன்

**கலைமகள் கம்பெனி**
174, ஹைரோடு,
திருநெல்வேலி சந்திப்பு.

**கலைமகள் நிலையம்**
122, பிராட்வே,
சென்னை—1.